மாநில அரிசன நலக்குழு உறுப்பினர்கள்.

·வினா எண். 653—திரு. சொ. ந. பழனிசாமி: மாண்புமிகு அரிசன நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாவுக்கு விடை யளிப்பாரா:—

தமிழ்நாடு மாநில அரிசன நலக்கமிட்டியில் கோவை மாவட்டத்தின் சார்பில் நியமிக்கப்பெற்றுள்ளவர்கள் யாவர்?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தமிழ்நாடு மாநில அரிசன நலக்குழுவில் கோவை மாவட்டத்தின் சார்பில் நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள் திரு. எஸ். ஆர். கோபால், திரு. பி. குருசாமி, எம்.எல்.ஏ., திரு. அண்ணாநம்பி, திரு. ஆர். எஸ். தங்கவேலு, எம்.எல்.ஏ., ஆகிய நால்வர் ஆவர்.

திரு. சொ. ந. பழனிசாமி: பேரவை உதவி சபாநாயகர் அவர்களே, கோவை மாவட்டத்தின் சார்பாக ஆளுங்கட்சியைச் சார்ந்தவர்கள்தான் அரிசன நலக் குழுவில் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று மாண்புமிகு அமைச்சரவர்கள் சொன்னார்கள். இதில் எதிர்க்கட்சியைச் சேர்ந்த உறுப்பினர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பதை இந்த அரசு அறியுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன்: தலைவரவர்களே, எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்பது தவறு. மாண்புமிகு உறுப்பினர்கள் சார்ந்திருக்கிற கட்சியைச் சேர்ந்த புதுக்கோட்டை மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர் திரு. சின்னையா அவர்கள் இடம் பெற்றிருகிறார்கள். இந்தக் குழுவில் எல்லாக் கட்சியையும் சேர்ந்தவர்கள் இடம் பெற்றிருக்கிறார்கள் என்பதுதான் உண்மை.

திரு. கு. ரமணி: துணைத் தலைவரவர்களே, இந்த அரிசன நலக் கமிட்டியில் பிரதிநிதிகளை நியமிப்பதற்கு அரசாங்கத்தினுடைய கிரைட்டீரியா என்ன? எந்த அளவுகோலை அடிப்படையாகவைத்து இந்தப் பிரதிநிதிகளை நியமிக்கிறார்கள்? அரசியல் கட்சி அடிப்படையிலா அல்லது அவர்கள் அரிசன சேவையில் முன் நிற்கிறார்கள் என்றா அல்லது சாதாரண சமூக சேவையில் மனிதாபிமான அடிப்படையில் வேலை செய்கிறார்கள் என்ற அடிப்படையிலா? எந்த அடிப்படையில் என்பதை அமைச்சரவர்கள் அறிவிப்பார்களா?

1979 ஏப்ரல் 7]

(முற்பகல் 9-10.)

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன எல்லா அடிப்படையையும் வைத்துத்தான் அரசாங்கம் உறுப்பினர்களை நியமிக்கிறது.

திரு. க. மருதாசலம் : தலைவரவர்களே, அமைச்சர் அவர்கள் கோவை மாவட்டத்தை மட்டும் குறிப்பிட்டார்கள். அதைப் போலவே, மாநில அரிசன குழுவின் பதவிக்காலம் எவ்வளவு? அவர்கள் யார், யார்? எந்த, எந்தப் பதவிகளில் இருக்கிறார்கள்? அவர்கள் பதவிகள் எப்பொழுது முடிவடையும் என்பதை அறிவிக்க இயலுமா?

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் ; தலைவரவர்களே, இந்தக் குழு 1978 ஆம் ஆண்டு பிப்ரவரித் திங்கள் 15ஆம் நாள் அன்று திருத்தியமைக்கப்பட்டது, பதவிக்காலம் 3 ஆண்டு. மொத்த உறுப்பினர்கள் 49 பேர்கள். அதில் உத்தியோகப் பற்றில்லாத உறுப்பினர்கள் 41 பேர்கள். அலுவல் சார்புள்ளவர்கள் 8 பேர்கள்.

திரு. யா. சை. மு. யூசுப் : பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தாங்கள் பொறுப்பேற்ற அன்று, தங்களைப் பாராட்டுகிற நேரத்திலே, எதிர்க்கட்சி உறுப்பினர்கள் எல்லாம் Ruling party has its way and the opposition has its say என்று சொன்னார்கள். அதை உறுதிப்படுத்துகின்ற வகையிலே,—எதிர்க்கட்சியிலே உள்ளவர்களுக்கு அளித்த வாய்ப்பைப்பற்றி, அமைச்சர் அவர்கள் சொன்னார்கள்—இனி அரசு ஆளுங்கட்சி உறுப்பினர்களை மட்டும், குழுக்களில் உறுப்பினர்களாகப் போட முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. பெ. சௌந்தரபாண்டியன் : தலைவர் அவர்களே, தொண்டுள்ளம் கொண்டவர்கள் எங்கெங்கே இருந்தாலும் அவர்களைக் கட்சி சார்பில்லாமல் போட்டால் தான் அரசாங்கத்திற்கு நல்ல ஆலோசனைகளும் நல்ல திட்டங்களும் கிடைக்கும் என்பதால்தான் சர்வகட்சியைச் சேர்ந்தவர்களையும் இந்த அரசாங்கம் நியமித்துக் கொண்டிருக்கிறது.